எடுத்துச் சென்று, குடமுழுக்கு நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் மத்திய அரசினுடைய தொல்லியல் ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அதனுடைய அனுமதியைப் பெற்று, அதனுடைய புனரமைப்பு வேலைகளைச் செய்து, குடமுழுக்கு செய்வதற்கு ஆவன செய்யப்படும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா தொடுக்கும் முன்பே விடைகளை வழங்கி, அந்தப் பேராலயத்திற்கும் குடமுழுக்கு நடத்தப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்த நாடு போற்றும் நற்றமிழ் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 438, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

438—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***5208—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்காக, கடவூர் வட்டம், கீழப்பகுதி கிராமம், தரகம்பட்டி, புல எண் 386/–1-ல், 0.84 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, மொத்த மதிப்பீடான ரூ.218.89 இலட்சத்தில் 2012–2013 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுடைய நிலையை அறிந்து 'அரசைத் தேடி மக்கள்' என்ற நிலையை மாற்றி, 'மக்களைத் தேடி அரசு' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலைமையை உருவாக்கி, வருவாய்த் துறையின்மூலம் "அம்மா திட்டம்" என்ற அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கிய எங்கள் வருங்கால பாரதப் பிரதமர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட கடவூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகள் இந்த ஆண்டு துவங்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 மே 8]

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில், மொத்தம் 14 புதிய வட்டங்கள் அவர்களால் அறிவிக்கப்பட்டன. அப்படி அறிவிக்கப்பட்ட 14 வட்டங்களில், இரண்டே இரண்டு வட்ட அலுவலகங்களுக்கு மட்டும்தான் கட்டடங்கள் கட்டுவதற்கு அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலேயே 9 வருவாய் வட்டங்களில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) 2.02 கோடி ரூபாய் நிதியை அப்போதே தாய் உள்ளத்தோடு ஒதுக்கித் தந்த ஓர் ஒப்பற்ற முதலமைச்சர் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகள் கடந்த ஆட்சியிலே அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னாலேதான், ரூ.218.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பொழுது பொதுப் பணித் துறைமூலமாக திட்டங்களெல்லாம் வகுக்கப்பட்டு, முதற்கட்டமாக பகுதி—II திட்டத்தின்கீழ் ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மிக விரைவிலே இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டவாய் மூடும் முன்னே, மக்களுடைய குறைகளை ஏற்று, தாய் உள்ளத்தோடு வாரி வழங்கிய எங்களது பாரத மாதா, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.